
# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 09 திங்கட்கிழமை | 23.06.2025 | கதிர் 233



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel






# செம்மணியில் 'அணையா விளக்கு' தொடர் போராட்டம் இன்று ஆரம்பம்

## சுழற்சி முறையில் உண்ணாவிரதமும் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரி 'அணையா விளக்கு' தொடர் போராட்டம் இன்று ஆரம்பமானது.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைக்குழிக்குச் சர்வதேச நீதி கோரி மக்கள் செயல் அமைப்பின் ஏற்பாட்டில் 'அணையா விளக்கு' எனும் மூன்று நாட்கள் தொடர் போராட்டம் யாழ். நல்லூர் வளைவுக்கு அருகில் இன்று ஆரம்பமானது.

7






## பச்சிலைப்பள்ளியின் தவிசாளராக சுரேன் இன்று ஏகமனதாகத் தெரிவு



கிளிநொச்சி, ஜூன் 23

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளராகச் சுப்பிரமணியம் சுரேன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

7

## சாவகச்சேரி பிரதேச சபையின் அதிகாரம் திருவுளச்சீட்டு முறை மூலம் தமிழரசு வசம்

### தவிசாளரானார் பொன்னையா குகதாசன்

சாவகச்சேரி, ஜூன் 23

சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளராகத் திருவுளச்சீட்டு முறை மூலம் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பொன்னையா குகதாசன் தெரிவானார்.

7



# திருகோணமலை மாநகர சபை தமிழரசு வசம்!



## மேயராகக் கந்தசாமி செல்வராஜா தெரிவு

திருகோணமலை, ஜூன் 23

திருகோணமலை மாநகர சபையின் ஆட்சி அதிகாரத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது. மேயராகக் கந்தசாமி செல்வராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை நகர சபையானது மாநகரசபையாக தரமுயர்தப்பட்டு முதலாவது சபை அமர்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமானது. இந்த அமர்வுக்குக் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்

7

# தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ள அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம்!

கொழும்பு, ஜூன் 23

அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக தெரிவித்துள்ளது. ஆசிரியர்களின் மாதாந்த சம்பளம் ஒவ்வொரு மாதமும் 20 ஆம் திகதி வழங்கப்பட்டாலும், ஜூன் மாதத்திற்கான சம்பளம் இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

இதன் காரணத்தால் ஆசிரியர்களின் ஜூன் மாதத்துக்கான சம்பளம் இன்று (23) நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆசிரியர்களின் மாதாந்த சம்பளம் ஒவ்வொரு மாதமும் 20 ஆம் திகதி வழங்கப்பட்டாலும், ஜூன் மாதத்திற்கான சம்பளம் இன்னும் கிடைக்கவில்லை என்று அதன் தலைவர் வணக்கத்திற்குரிய யல்வெல பன்னசேகர தேரர் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் சம்பளம் கடந்த மாதமும் தாமதமானது, இதற்கான காரணம் ஆராயப்பட வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கார் விபத்து சம்பவம்– தாய் கண் முன்னே பறிபோன மகளின் உயிர்!

மட்டக்களப்பு பகுதியில் இடம்பெற்ற கார் விபத்தில் 15 வயது சிறுமி மற்றும் கார் சாரதி உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்து சம்பவம் இன்று (23) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவது,

மட்டக்களப்பு - ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள வந்தாறுமூலையில் இருந்து களுவங்கேணி நோக்கி பயணித்த கார் ஒன்று இரண்டாவது மைல்கல் பகுதியில் வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தின் போது காரை செலுத்திய சாரதி மற்றும் 15 வயது சிறுமி ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த சிறுமியின் தாய் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த பெண்ணின் கணவர் வெளிநாட்டில் இருந்துவரும் நிலையில், உயிரிழந்த சிறுமியான மகளுடன் கருவப்பங்கேணியில் உள்ள அவர்களது பன்றிவளர்க்கும் பண்ணையை பார்ப்பதற்காக சென்ற போது குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு சின்ன ஊறணி கருவப்பங்கேணி செலியன் வீதி இரண்டாம் குறுக்கைச் சேர்ந்த ஜெந்திரகுமார் சஞ்சய் மற்றும் நாவலர் வீதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியான பிரதீபன் தவஸ்வாணி ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலம் மட்டு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடதக்கது.

# ஐ.நா சபையின் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் வோல்கர் டேர்க் இலங்கைக்கு வியஜம்!

கொழும்பு, ஜூன் 23

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் வோல்கர் டேர்க் இன்று நாட்டிற்கு வருகைத்தரவுள்ளார்.

2016ஆம் ஆண்டுக்குப்பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் ஒருவர் இலங்கைக்கு வருவது இதுவே முதன்முறையாகும்.

இந்த விஜயத்தின் போது, உயர் ஸ்தானிகர் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரை சந்திக்க உள்ளார்.

இதன் போது மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக்கூறல், செயற்திறன்மிக்க தீர்வுகள் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் என்பன உள்ளடங்கலாக பரந்தளவிலான மனித உரிமைசார் பிரச்சினைகள் குறித்தும், பொருளாதார நெருக்கடியின் விளைவாக மனித உரிமைகளின் மீது ஏற்பட்டிருக்கும் தாக்கங்கள் குறித்தும் உயர்ஸ்தானிகர் கலந்துரையாடல்களை முன்னெடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது

வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் உட்பட பல அமைச்சரவை அமைச்சர்களுடனும், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மூத்த அரசு அதிகாரிகள், சிவில் சமூக பிரதிநிதிகள், இராஜதந்திர சமூக உறுப்பினர்கள் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணையத்துடனும் கலந்துரையாடல்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் அவர் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர்களைச் சந்திப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் எதிர்வரும் 26ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார் என வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு அறிவித்துள்ளது.



# எரிபொருளை பதுக்கி வைக்கவேண்டாம்



கொழும்பு, ஜூன் 23

எரிபொருள் தட்டுபாடு ஏற்படலாம் என பொதுமக்கள் எரிபொருளை பதுக்கி வைப்பதைத் தவிர்க்குமாறு பெட்ரோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் சூழ்நிலை காரணமாக எதிர்காலத்தில் பெட்ரோலிய விலைகள் அதிகரிக்கும் அபாயம் இருப்பதாக சங்கத்தின் துணைத் தலைவர் குசும் சந்தனாயக்க தெரிவித்தார்.

இவ்வாறான போர் சூழல் ஏற்பட்டால் எரிபொருள் இல்லாமல் போகாது. விலைகளில் மட்டுமே மாற்றம் ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

அதோடு இது எங்களுடைய பிரச்சினை அல்ல என்றும், உலகின் சக்திவாய்ந்தவர்களின் பிரச்சினை என தெரிவித்த அவர், அடுத்த சில மாதங்களுக்கு எரிபொருளை இறக்குமதி செயவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் ஏற்கனவே செய்து வருகின்றதாகவும் குறிப்பிட்டார். (ஐ)

# யாழில் திடீரென சுழற்றி அடித்த காற்று! மக்களுக்கு விடுத்துள்ள அறிவிப்பு

யாழப்பாணத்தில் பல பிரதேசங்களில் சற்று முன்னர் பாரிய சுழல் காற்றுடன் மழை பெய்ய ஆரம்பித்துள்ளது திடீரென சுழற்றி அடித்த காற்றினால் மரங்கள் முறிந்து விழுந்துள்ளன.

தற்போது இடி மழையுடன் பலத்த காற்று ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது இதேவேளை பாரிய காற்றினால் மின்சாரம் பல பகுதிகளில் துண்டிக்கப்பட்டுள்ளது.

மரங்கள் முறிந்து விழுந்து சேதம் ஏற்படும் பட்சத்தில் உடனடியாக மின்சார சபையை தொடர்புகொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் இளம்குமரன் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார் . அவரது பதிவில் அறிவித்தல் யாழ் மாவட்டத்தில் பலத்த காற்று வீசி வருகின்றது. இதனால் மின் வடங்கள் (உழனெரஉவழசளஃ கரண்ட் கம்பிகள்) அறுந்து விழக்கூடும்.

இவ்வாறு அறுந்து விழுந்திருப்பது அவதானிக்கப்பட்டால், உடனடியாக மின்சார சபைக்கு அறிவிப்பதோடு, மின்சார சபையினர் வந்து மின் இணைப்பை துண்டிக்கும் வரை அதன் அருகில் ஒருவரையும் செல்ல விடாது காத்திருந்து சமூக நலன் பேணவும்.

எந்நேரமும் தொடர்பு கொள்ளக்கூடிய இலங்கை மின்சார சபையின் தொலைபேசி இலக்கம் (021) 202 4444 அல்லது கீழ் வரும் பொருத்தமான பிரதேசங்களுக்கு ஏற்புடைய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**Jaffna 0212222609**
**Thirunelveli Kondavil 0212222498**
**Chunnakam 0212240301**
**Chavakachcheri 0212270040**
**Point Pedro 0212263257**
**Vaddukoddai 0212250855**
**Velanai 0212211525**

முயமெநளயவொரசயை 0212245400 என்ற இலக்கங்களுக்கு தொடர்புகொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# யாழில் நிறுத்தப்பட்ட இசை நிகழ்ச்சி! சோகத்துடன் வெளியேறிய பாடகர்கள்!



யாழ்ப்பாணத்தில் இன்று திடீரென பாரிய சுழல் காற்றுடன் மழை பெய்ததால் சரிகமப இசைக்குழுவினர் கலந்துகொண்ட இசை நிகழ்ச்சி நிறுத்தப்பட்டுள்ளது.

இசைநிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக தமிழகத்தின் பிரபலமான தொலைக்காட்சி நிறுவனத்தின் சரிகமப இசைக்குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

ஜீ தமிழ் தொலைக்காட்சி இடம்பெற்று வரும் சரிகமப இசை நிகழ்ச்சியானது சீனியர், யூனியர் என்ற ரீதியில் தொடர்சியாக இடம்பெற்று உலகளவில் அனைவரையும் கவர்ந்து வருகின்றது.

இந்த நிலையில், பிரமாண்ட இசைநிகழ்ச்சியொன்று யாழ்ப்பாணத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட நிலையிலேயே சரிகமப இசைக்குழுவினர் பலாலி விமான நிலையத்தினூடாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

இசை நிகழ்வைசரிகமபவின் பிரபல தொகுப்பாளினி அர்ச்சனா தொகுத்து வழங்கவிருந்தார். மேலும் சரிகமப லிட்டில் சாம்பிஸ ின் சீசன் 4 இன் ரைட்டில் வின்னரான திவினேஷ் உட்பட 10 பாடகர்கள் இந்த இசைநிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். இந்நிலையில் ஒரு பாடல் பாடி முடிப்பதற்கு முன்னரே காற்றுடன் மழை பெய்ததால் நிகழ்ச்சி தடைப்பட்டதுடன் நிகழ்ச்சியும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ஐ)





# மட்டு.நகரில் தீப்பற்றிய வேன்

கொழும்பு, ஜூன் 23

மட்டக்களப்பு நகரில் பாடு மீன் வீதியில வீடு ஒன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கேடி எச் ரக வேன் ஒன்று திங்கட்கிழமை (23) அன்று அதிகாலை தீப்பற்றி எரிந்ததை அடுத்து தீயணைக்கும் படையினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் இதன் போது வேன் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் இருந்து மட்டக்களப்பில் உள்ள உறவினர் வீட்டிற்கு குறித்த வானில் ஞாயிற்றுக்கிழமை (22) அன்று இரவு வந்தடைந்து வேனை வீட்டின் முன் நிறுத்தி விட்டு நித்திரைக்கு சென்றுள்ள நிலையில் வேன் அதிகாலை 1.30 மணியளவில் தீப்பற்றியதை கண்டு உடன் தீயணைப்பு படையினர் வரவழைக்கப்பட்டு தீயை கட்டுப்பாட்டில் கொண்டு வந்த போதும் வேன் முற்றாக தீப்பற்றி எரிந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மக்காச்சோள விற்பனையில் மோசடி





கொழும்பு, ஜூன் 23

நாட்டின் மக்காச்சோள அறுவடையை குறைந்த விலைக்கு வாங்கி, சேமித்து வைத்து, அதிக விலைக்கு விற்பனை செய்யும் மோசடியில் பல இடைத்தரகர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று விவசாய அமைச்சகத்தின் செயலாளர் டி.ஜி.விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் மக்காச்சோள அறுவடை ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களில் நிறைவடைகிறது, மேலும் இடைத்தரகர்கள் அறுவடையை கிலோவுக்கு ரூ.120 முதல் ரூ.130 வரை விலையில் வாங்கி, கிலோவுக்கு ரூ.170 விலையில் விற்க முயற்சிப்பது மிகவும் நியாயமற்றது என்று விக்ரமசிங்க கூறினார்.

இடைத்தரகர்களின் இந்த நடவடிக்கையால், கால்நடை தீவனத்தின் விலை அதிகரித்து வருவதாகவும், முட்டை மற்றும் கோழியின் விலை அதிகரித்தால், அதற்கு அரசாங்கம்தான் காரணம் என்றும் அவர் கூறினார்.

இடைத்தரகர்கள் அதிக விலைக்கு விற்பனை செய்வதால், அதை வாங்கி கால்நடை தீவனத்தை உற்பத்தி செய்ய முடியாது என்று கூறி, கால்நடை தீவன உற்பத்தியாளர்கள் சோளத்தை இறக்குமதி செய்ய ஒப்புதல் கோரியதாக அவர் தெரிவித்தார்.

இந்த வணிகர்கள் கிலோவுக்கு ரூ.150 விலையில் மக்காச்சோளத்தை உள்ளூரில் வாங்கத் தயாராக இருப்பதாக செயலாளர் கூறினார்.

அவர்களின் வேண்டுகோளைக் கருத்தில் கொண்டு, பல கால்நடை தீவன உற்பத்தியாளர்கள் மற்றும் ஒரு சில கோழி வளர்ப்பாளர்களுக்கு சோளத்தை இறக்குமதி செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால், இந்த நாட்களில் உலகில் சோளத்தின் பற்றாக்குறை காரணமாக, ஒரு சிறிய அளவை மட்டுமே இறக்குமதி செய்ய முடிந்தது என்றும் அவர் கூறினார்.

இந்த நாட்டில் சோளத்தை சேமித்து விற்பனை செய்யும் சில தொழிலதிபர்கள் சோளத்தின் எடையை அதிகரிக்க அதன் மீது தண்ணீர் தெளித்து, கிரானைட் போன்ற பொருட்களை சாக்குகளில் போடுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக திரு. விக்ரமசிங்க கூறினார். சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்க முடியாது என்றும், முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலையைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும், கால்நடை உற்பத்தியாளர்கள் சோளத்தின் அதிக விலைக்கு மாற்றாக அரிசியைப் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தால், அது நாட்டில் அரிசி பிரச்சினையையும் பாதிக்கும் என்றும் அவர் கூறினார். கோழிப்பண்ணை உரிமையாளர்கள் மற்றும் கால்நடை தீவன உற்பத்தியாளர்கள் மட்டுமே சோளத்தை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக திரு. விக்ரமசிங்க மேலும் கூறினார். இறக்குமதி செய்யப்பட்ட சோளத்தை சந்தையில் வெளியிட்டால், அந்த நபர்கள் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டு அதை இறக்குமதி செய்ய தடை விதிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# கேரளாவில் ஆளுங்கட்சி தோல்வி... குஜராத், பஞ்சாப்பில் ஆம்ஆத்மி வெற்றி 4 மாநில இடைத்தேர்தல் முடிவுகள்



கேரளாவின் நிலம்பூர் தொகுதி இடைத்தேர்தலில் ஆளுங்கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை தோற்கடித்து காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது.

கடந்த ஜூன் 19ம் தேதி கேரளாவின் நிலம்பூர் தொகுதிக்கும், மேற்கு வங்கத்தின் கலிகஞ்ச் தொகுதிக்கும், பஞ்சாப்பின் லூதியானா மேற்கு தொகுதிக்கும், குஜராத்தின் விசவதர் மற்றும் காதி தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடைபெற்றது. மேற்குவங்கம் மற்றும் கேரளாவுக்கு அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளதால், இந்த இடைத்தேர்தலை அனைத்து கட்சிகளும் முன்னோட்டமாக பார்க்கின்றன.

கேரளாவின் நிலம்பூர் தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் ஆர்யதன் ஷௌகத் ஆரம்ப முதலே முன்னிலையில் இருந்தார். ஓட்டு எண்ணிக்கையின் முடிவில் காங்கிரஸ் வேட்பாளர் ஆர்யதன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளரை விட 11,077 ஓட்டுகள் வித்தியாசத்தில் பெற்றார். மொத்தமாக அவர் 77,737 ஓட்டுகளை வாங்கியுள்ளார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர் 66,660 ஓட்டுகளையும், சுயேட்சையாக போட்டியிட்ட அன்வர் 19,760 ஓட்டுகளையும் பெற்றனர். பா.ஜ., 8,648 ஓட்டுகளை மட்டுமே பெற்று 4வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

நிலம்பூர் தொகுதி காங்., எம்.பி., பிரியங்காவின் வயநாடு லோக்சபா தொகுதிக்குள் வருவதால், இந்தத் தேர்தல் முடிவு காங்கிரசுக்கு முக்கியமானதாக பார்க்கப்படுகிறது.

டில்லி சட்டசபை தேர்தல் தோல்விக்குப் பிறகு, ஆம்ஆத்மி போட்டியிடும் முதல் தேர்தல் இதுவாகும். இந்தத் தொகுதியை மீண்டும் கைவசப்படுத்த ஆம்ஆத்மி போராடியது. அதன்படி, ஆம்ஆத்மி வேட்பாளர் சஞ்சீவ் அரோரா 30,237 ஓட்டுகளைப் பெற்ற வெற்றி பெற்றார். 8,697 ஓட்டுகள் வித்தியாசமாகும். காங்கிரஸ் வேட்பாளர் பாரத் பூஷன் அஷு 21,540 ஓட்டுகளும், பா.ஜ., வேட்பாளர் ஜீவன் குப்தா 17,435 ஓட்டுகளையும் பெற்றனர்.

விசாவதர் தொகுதியில் ஆம்ஆத்மி சார்பில் போட்டியிட்ட பூபேந்திர பயானி, கடந்த 2023ம் ஆண்டு பதவியை ராஜினாமா செய்து விட்டு, பா.ஜ.,வில் இணைந்து விட்டார். எனவே, இந்த தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. 2007ம் ஆண்டு முதல் இந்தத் தொகுதியை பா.ஜ., வென்றதே இல்லை. எனவே, இந்த முறை எப்படியாவது ஜெயிக்க வேண்டும் என்று கிர்த்தி படேலை பா.ஜ., களமிறக்கியது. ஆம்ஆத்மி சார்பில் கோபால் இதாலியாவை நிறுத்தியது.

ஓட்டு எண்ணிக்கையில் பா.ஜ., - ஆம்ஆத்மி இடையே கடும் போட்டி நிலவியது. இறுதியில், ஆம்ஆத்மி வேட்பாளர் கோபால் இதாலியா 75,942 ஓட்டுகளை பெற்றார். இதன்மூலம், 17,554 ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். பா.ஜ., வேட்பாளர் கிர்த்தி படேல் 58,388 ஓட்டுகளும், காங்கிரஸ் வேட்பாளர் 5,501 ஓட்டுகளையும் பெற்றுள்ளனர். இதன்மூலம், விசாவதர் தொகுதி மீண்டும் ஆம்ஆத்மி வசம் சென்றது.

அதேபோல, காதி தொகுதி பா.ஜ., எம்.எல்.ஏ., கர்சன் சோலாங்கி மறைவை தொடர்ந்து, இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. தனி தொகுதியான காதியில் பா.ஜ., சார்பில் ராஜேந்திர சவாடா போட்டியிட்டார்.

காங்கிரஸ் சார்பில் ரமேஷ் சவாடாவும், ஆம் ஆத்மி சார்பில் ஜெக்தீஷ் சவாடாவும் களமிறங்கினர். ஓட்டு எண்ணிக்கை முடிவில் பா.ஜ.,வின் ராஜேந்திரகுமார் சவாடா 39,452 ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவர் மொத்தம் 99,742 ஓட்டுகளை வாங்கினார். அவரை எதிர்த்து போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் ரமேஷ் சவாடா, 60,290 ஓட்டுகளையும், ஆம் ஆத்மி வேட்பாளர் ஜெகதீஷ் சவாடா 3,090 ஓட்டுகளையும் பெற்றார்.

திரிணமுல் காங்கிரஸ் எம்.எல்.ஏ-, நசாருதின் அகமது மறைவை தொடர்ந்து இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. அவரது மகள் ஆலிபா அகமது திரிணமுல் காங்கிரஸ் சார்பில் வேட்பாளராக போட்டியிட்டார். அவர் மொத்தம் 56,566 ஓட்டுகளைப் பெற்றார். பா.ஜ., வேட்பாளர் ஆஷிஷ் கோஷை (25,412 ஓட்டுகள்)விட 31,154 ஓட்டுகள் கூடுதலாக பெற்றுள்ளார். காங்கிரஸ் வேட்பாளர் கபில் உதின் 19,102 ஓட்டுகளை பெற்றார். (ஐ)

## இந்தூர் – புவனேஸ்வர் இண்டிகோ விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு பயணிகள் கடும் அவதி




இந்தூர் - புவனேஸ்வர் இண்டிகோ விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதால், பயணிகள் கடும் அவதி அடைந்தனர்.

மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் இருந்து புவனேஸ்வருக்கு (ஒடிசா மாநிலம்) செல்லும், இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம் (6E 6332) இன்று (ஜூன் 23) காலை 9.00 மணிக்கு 140 பயணிகளுடன் புறப்பட தயாரானது. விமானம் புறப்படுவதற்காக, ஓடுபாதையை நோக்கி சென்று கொண்டிருந்த போது தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதை விமானி கண்டுபிடித்தார்.

இதையடுத்து விமானம் புறப்படாமல் நிறுத்தப்பட்டது. இயந்திரத்தில் பிரச்னை ஏற்பட்டதால், விமானம் தாமதமாக செல்லும் என்று, அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து விமானம் பழுது பார்க்கப்பட்டு, காலை 10.16 மணிக்கு புறப்பட்டு சென்றது. விமானம் சரியான நேரத்தில் புறப்படாமல் தாமதம் ஏற்பட்டதால், பயணியர் விமான நிலைய அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

ஒரு மணி நேரம் தாமதம் ஏற்பட்டதால், பயணிகள் கடும் அவதிகள் அடைந்தனர். சமீப காலமாக, விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு அடிக்கடி நிகழ்ந்து வருவதால், பயணிகள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. (ஐ)

## கார் ஏறி தொண்டர் உயிரிழந்த சம்பவம் ஆந்திர மாஜி முதல்வர் ஜெகன் மோகன் மீது வழக்குப்பதிவு



தன்னுடைய காரின் சக்கரத்தில் சிக்கி தொண்டர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக ஆந்திர முன்னாள் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

ஆந்திராவின் ரெண்டபல்லா கிராமத்தில் தற்கொலை செய்து கொண்ட கட்சி நிர்வாகி ஒருவரின் வீட்டுக்கு ஆந்திர முன்னாள் முதல்வரும், ஒய்.எஸ்.ஆர்., காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ஜெகன்மோகன் ரெட்டி நேற்று வந்தார். குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து விட்டு, மீண்டும் காரில் ஏறி அவர் புறப்பட்டார்.

குண்டூர் மாவட்டத்திற்குள் அவரது கார் சென்ற போது, ஒய்.எஸ்.ஆர்., கட்சி தொண்டர்கள் சூழ்ந்து கொண்டனர். அப்போது, செல்லி சிங்கையா என்ற தொண்டரும் ஜெகன்மோகனின் காரின் அருகில் சென்றார். அந்த சமயம், சிலர் அவரது காரின் மீது ஏறி அலப்பறை செய்தனர். அப்போது, கால் தவறி விழுந்த சிங்கையா கீழே விழுந்தார். இதனை யாரும் கவனிக்காத நிலையில், டிரைவரும் காரை முன்னோக்கி செலுத்தினார். சிங்கையாவின் தலையின் மீது ஜெகன் மோகன் ரெட்டி சென்ற கார் ஏறி இறங்கியது. இதில், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த நிலையில், தொண்டர் உயிரிழந்த சம்பவத்தில் ஜெகன் மோகன் ரெட்டியின் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

ஆரம்பத்தில் உயிரிழந்த தொண்டரின் மனைவி கொடுத்த புகாரின் பேரில் ஜெகன் மோகன் ரெட்டி உள்பட 6 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு, சமூக வலைதளங்களில் ஜெகன் மோகனின் கார் தொண்டர் மீது ஏறி இறங்கும் வீடியோ வைரலான நிலையில், அதனடிப்படையில் பிரிவுகள் மாற்றம் செய்து வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக குண்டூர் மாவட்ட எஸ்.பி., சதீஷ் குமார் தெரிவித்துள்ளார். (ஐ)

## இந்தியாவிற்கு மிகப்பெரிய சொத்து: பிரதமர் மோடிக்கு சசி தரூர் பாராட்டு



"பிரதமர் நரேந்திர மோடியின் ஆற்றல், சுறுசுறுப்பு உள்ளிட்டவை உலக அரங்கில் இந்தியாவிற்கு ஒரு முக்கிய சொத்தாக உள்ளது" என காங்கிரஸ் எம்.பி., சசி தரூர் பாராட்டி உள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவரும், எம்.பி.யுமான சசி தரூர் சமீப காலமாக பிரதமர் மோடியையும், மத்திய அரசையும் பாராட்டி பேசி வருகிறார். இதற்கு காங்கிரஸ் கட்சியில் கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது.

அக்கட்சி தலைவர்கள் சிலர், சசி தரூருக்கு கண்டனம் தெரிவித்தாலும், விமர்சனம் செய்தாலும் அதனை சசிதரூர் கண்டுகொள்ளவில்லை. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை வெளிநாடுகளில் எடுத்துரைத்து விட்டு, சமீபத்தில் நாடு திரும்பிய காங்கிரஸ் எம்.பி. சசி தரூர், பிரதமர் நரேந்திர மோடியை பாராட்டி உள்ளார்.

அவர் கூறியதாக வெளியான செய்தியில் கூறியிருப்பதாவது: பிரதமர் நரேந்திர மோடியின் ஆற்றல், சுறுசுறுப்பு உள்ளிட்டவை உலக அரங்கில் இந்தியாவிற்கு ஒரு முக்கிய சொத்தாக உள்ளது. ஆனால் அதற்கு அதிக ஆதரவு தேவை. இந்த முயற்சி உலக அரங்கில் இந்தியாவின் ஒற்றுமையைக் காட்டுகிறது.

நாடு தொடர்ந்து பாடுபடுவதால், தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் பாரம்பரியம் ஆகிய மூன்றில் இந்தியாவின் செயல்பாடுகள் உலக அளவில் சிறந்ததாக வேண்டும். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை ஒரு சட்டபூர்வமான தற்காப்புப் பயிற்சி.

தொடர்ச்சியான எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு அவசியமானது என்பதை நாங்கள் வெளிநாடுகளிடம் விளக்கினோம். லஷ்கர்-இ-தொய்பா மற்றும் ஜெய்ஷ்-இ-முகமது போன்ற பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)



# பெண் கல்வி

அதிகாரம் அறிவினால் கட்டப்படுகிறது. இதனால் இயற்கையாகவே ஆண்-பெண் உறவு முறையில் ஏற்படும் அதிகாரப் போட்டியில் தனது மேலாட்சியைக் கட்டமுயன்ற ஆண் சமூகம் முதலில் பெண்ணுக்கான அறிவு வளர்ச்சியைக் கட்டுப்படுத்தியது. இதற்காக பல தந்திரங்களைக் கையாண்டுள்ளது. பால்ய விவாகம் கற்புக் கோட்பாடு தாய்மையைக் கொண்டாடுவது குழந்தைபேறு என்று பெண்களுக்கு கற்பிக்கப்பட்ட வாழ்க்கை முறையைத் திணித்தது. இது பெண்களின் அறிவு வளர்ச்சிக்குத் தடையாக அமைந்தது. அவர்களுக்கு சுமையாக மாறியது.

குறிப்பாக பால்ய விவாகம் அறிவைத் தரும் கல்வியைப் பெறுவதிலிருந்து பெண்ணைப் பெரிதும் விலக்கி வைத்துவிட்டது. வளர்ந்த இளம் பெண்கள் கூட்டம் கூட்டமாகப் புத்தமதத்திலும் சமணசமயத்திலும் சந்நியாசிகளாகச் சேர்வதைத் தடுப்பதாகத்தான் இந்தியச் சமூகத்தில் பால்ய விவாகம் கொண்டுவரப்பட்டது என எழுதுகிறார் பி. குப்புசாமி

இவ்வாறு அறிவு வளர்ச்சிக்கு ஆதாரமாக அமையும் கல்வி பெறுவதை ஆண் சமூகம் தனதாக்கிக் கொண்டது. மேலும் பெண்ணறிவு என்பது பேதமைத்து பெண்ணுக்கு அறியாமையே அழகு என்றும் புனைந்துவிட்டது. பெண்ணை இருகால் முளைத்த ஒரு நடமாடும் கருப்பை என்றே நினைக்க வைத்துவிட்டது.

இத்தகைய இந்தியப் பெண்நிலைமை இந்தியாவை ஆண்ட ஐரோப்பியரின் குறிப்பாக ஆங்கிலேயரின் ‘கல்வி



கொள்கையினால்’ பெரிதும் மாறத் தொடங்கின.

ஆங்கிலேயர் கல்வியை ஜனநாயகப்படுத்தினர். ஜாதி மதம், பால் வர்க்கம், இனம் என்கிற வேறுபாடு இல்லாமல் அனைவருக்கும் கல்வி என அறிவித்தனர். அதுவும் ஒரே மாதிரியான கல்வி என்றனர். இந்த ஒரு கல்விக் கொள்கைதான் இந்தியச் சமூகத்தில் பெரும் மாற்றங்களும் சிந்தனைப் புரட்சிகளும் ஏற்பட வழிகோலிற்று. வேத காலத்தில் பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கினாலும் நாளடைவில் அவர்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. இதனால் பெண்கள் தாழ்வான நிலைக்கும் படிப்படியாக தள்ளப்பட்டனர். பல நூற்றாண்டு காலம் வரை இந்நிலை நீடித்தது.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவ சமய போதகர்கள் மிஷனரிகள் பல்வேறு சீர்த்திருத்த சமூக பணிகளை மேற்கொண்டன. அவர்கள் மேற்கொண்ட பணிகளுள் குறிப்பிடத்தக்க பணியாக அமைந்தது பெண் கல்வி.

பெண்கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்த இந்திய சமூகச் சீர்த்திருத்தவாதிகளும் அவர்களோடு இணைந்து பாடுபட்டனர். அதன் பயனாக பல கல்விக்கூடங்கள் திறந்துவிடப்பட்டன.

ஆங்கில ஆட்சியில் முக்கிய அங்கமாக விளங்கியவர்கள் குடியேற்ற நிர்வாகிகளும் சமயக் குழுவினர்களுமாவர். ஆயினும் கல்விமுறை எவ்வாறு வளர்ச்சியுற வேண்டும் என்பது பற்றி அவர்களிடத்து ஒருமித்த கருத்து இருக்கவில்லை.

கிறிஸ்தவ சமய போதகர்கள் மாநிலவாரியாகப் பெண்களுக்கான பள்ளிக்கூடங்களை நிறுவத்தொடங்கினர். பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தரங்கைவாசத்தில் பெண்களுக்கான கல்விக்கூடத்தை தொடங்கினார்கள்.

சென்னையில் 1715ல் முதல் ஆங்கிலோ- இந்தியப் பெண்கள் பள்ளியான ‘புனித மரியாள் ஷேரிட்டி பள்ளி’ தொடங்கப்பட்டது. அப்பள்ளியில் புரட்டஸ்டாண்ட் மதப்பிரிவைச் சார்ந்த ஏழை மாணவ மாணவிகள் சேர்ந்து பயில ஆரம்பித்தனர். அவர்களில் பதினெட்டு பேர் ஆண்கள். பன்னிரண்டு பேர் பெண்கள். 1821ம் ஆண்டு இப்பள்ளிக் குழுவைச் சார்ந்த பள்ளிகளில் 654 பெண்களும் 4290 ஆண்களும் கல்வி பயின்றார்கள். அவர்கள் யாவரும் கிறித்தவ சமயத்தைச் சேர்ந்தவர்கள்.

திருநெல்வேலியில் ஜேம்ஸ் ஹக் என்பவர் 1816ம் ஆண்டில் பன்னிரண்டு பள்ளிகளை நிறுவினார். அவற்றுள் மூன்று பெண்களுக்காக தொடங்கப்பட்டது. நாசரேத்தில் தொடங்கப்பட்ட பெண்களுக்கான பள்ளியே சென்னை மாகாண அரசால் அங்கீகரிக்கப்பட்ட முதல் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகும்.

1823ம் ஆண்டு நாகர்கோயிலில் தொடங்கப்பட்ட பள்ளியில் 1827ம் ஆண்டு ஐம்பது மாணவிகள் பயின்றனர். 1845 ஆம் ஆண்டு முதன்முதலாக சுதேசியப் பெண்கள் பள்ளி சென்னையில் தொடங்கப்பட்டது. இப்பள்ளியே பின்னர் பெண்கள் பள்ளிகள் பல தொடங்குவதற்கான முன்னோடியாகத் திகழ்ந்தது. 1854 இல் சென்னை மாநிலத்தில் 256 பெண்களுக்கான பள்ளிக்கூடங்களும் 7878 மாணவிகளும் இருந்துள்ளனர். ஆனாலும் இவர்களுக்கு சடங்கான பின்பு கல்வி கற்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. 1891-92 இல் 3 லட்சம் பள்ளி சிறுமிகளில் 100க்கு இரண்டு பேர் மட்டுமே சடங்கான பின்பும் உயர்நிலைப்பள்ளிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்தக் கல்வியும் எப்படி நல்ல மாணவியாக, நல்ல தாயாக குடும்பத்தை சுத்தமாகப் பேணுபவளாக வாழ்வது என்பதைத்தான் சொல்லிக் கொடுத்தது.

கல்விச் சீர்த்திருத்தங்கள் செய்வதற்கான நோக்கத்தோடு அரசு கல்வி தொடர்பான பல விபரங்களை சேகரிக்கத் தொடங்கின. சென்னை மாகாண ஆளுநராக இருந்த சர். தாமஸ் மன்றோ அவ்வாறு பல தகவல்களை சேகரித்து 1826 ஆம் ஆண்டு ஓர் அறிக்கையை சமர்ப்பித்தார். அதன்படி மொத்த மக்கள் தொகையான 1,34,76,923 பேரில் 1,84,110 ஆண்களும், 4,540 பெண்களும் கல்வி பயின்று வந்தனர்.

அதே காலத்தில் வங்காளத்தில் சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி அம்மாகாணத்தில் பெண்கல்வி சிறிய அளவில்கூட இடம் பெற்றிருக்கவில்லை என்று தெரிய வருகிறது.

1854ம் ஆண்டு சார்லஸ் வுட் என்பவர் இந்திய கல்விநிலை தொடர்பான அறிக்கை ஒன்றினை அரசுக்கு சமர்ப்பித்தார். அதுவே சார்லஸ் வுட் டெஸ் பாட்ச் என்னும் பெயரில் பிரசித்தம் பெற்றது. இவ்வறிக்கை ஆண் கல்வியைக் காட்டிலும் பெண் கல்வியின் வாயிலாகச் சமுதாயத்தில் வியக்கத்தக்க மாற்றங்களை உருவாக்க முடியும் என்பதை அரசுக்கு உணர்த்தியதோடு பெண்கல்விக்குப் போதிய ஊக்கமளிக்கவும் வேண்டியிருந்தது. இவ்வறிக்கையின் அடிப்படையில் மகளிர் பள்ளிக்கூடங்கள் பலவற்றுக்கும் அரசுநிதி உதவியளித்தது. அதன் வாயிலாக பெண்களின் கல்வி மேம்பாட்டுக்கு சிறந்ததொரு அடித்தளம் அமைக்கப்பட்டது. தன்னார்வ குழுக்களும் கிறிஸ்தவ சமயத் தொண்டர்களுக்கும் பல இடங்களில் பெண்களுக்கான கல்விக்கூடங்களை நிறுவிச் சேவை செய்யலாயினர்.

1882 இல் ஹண்டர் தலைமையில் அமைக்கப்பட்ட இந்தியக் கல்விக்குழு அந்நாளில் கல்வி கற்றுக் கொண்டிருந்த பெண்களின் எண்ணிக்கையில் சென்னை மாகாணமே முதலிடம் வகிப்பதாக குறிப்பிட்டுள்ளது. குழந்தைத் திருமணமே பெண்கள் கல்வி கற்பதற்குத் தடையாக இருப்பதாகவும் சிறுவயதிலேயே படிப்பு நிறுத்தப்படுவதாகவும் அக்கல்விக் குழு தெரிவித்துள்ளது. பெண் ஆசிரியர்கள் இல்லாமையையும் சுட்டிக்காட்டியுள்ளது. பெண்கள் கல்வி மேம்பாட்டிற்காக இக்கல்விக்குழு பின்வரும் பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளது.

1. பெண் கல்விக்கு ஊக்கமளிக்கப்பட வேண்டும்.

2. பெண்கள் பள்ளிகள் மற்றும் அநாதை விடுதிகள் ஆகிய நிறுவனங்கள் கல்வியறிவை அளிக்கும் போது அந்நிறுவனங்களுக்கு சமய வேறுபாடின்றி உதவித் தொகையை அரசு வழங்க வேண்டும்.

3. ஆண்கள் பயிலும் பள்ளிகளைவிட பெண்கள் பயிலும் பள்ளிகளுக்கு நிதிஉதவி விதிமுறைகள் தளர்த்தப்பட வேண்டும்.

4. தொடக்கப்பள்ளி நிலையிலும் ஆண்களின் கல்விமுறைப் பாடத்திட்டத்தைக் காட்டிலும் பெண்களின் கல்விமுறைப் பாடத்திட்டம் எளிமையாகவும் நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்புடையதாகவும் வேலைவாய்ப்பு அளிப்பதற்குரியதாகவும் இருத்தல் வேண்டும்.

5. கல்விக்காகக் கொடுக்கப்படும் உதவித் தொகையை தேர்வுக்குப்பின் கொடுப்பதன் மூலமாக பெண்கள் மேலும் கல்வியைத் தொடர வாய்ப்பாக அமையும். தவிர பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்ட பெண்களின் கல்விக்காக தனிநிதி ஒதுக்க வேண்டும்.

6. பெண்கள் பள்ளிகள் தகுந்த இடங்களில் நிறுவப்பட வேண்டும். தாய்மொழி மற்றும் ஆங்கிலம் வாயிலாக கல்வி புகட்டப்பட வேண்டும். விடுதிகளோடு தொடங்கப்படும் பெண்கள் பள்ளிகளுக்கு சிறப்பான முறையில் நிதியுதவி அளிக்கவேண்டும்.

7. இந்தியக் கலாச்சாரச் சூழலில் ஆண்-பெண் இணைந்து கல்வி கற்கும் நிலை சமுதாயத்திற்கு ஏற்புடையதாகாது என்பதால் பால்வாடிகள் தவிர ஏனைய கல்விக்கூடங்களில் கூட்டுக்கல்வி முறைக்கு ஆதரவு மறுக்கப்படுதல் வேண்டும். ஆனால் பெண்கள் பள்ளிகள் அமைக்க முடியாத டங்களில் மட்டும் கூட்டுக்கல்வி முறை தொடரலாம்.

8. அனைத்து பெண்கள் பள்ளிகளிலும் படிப்படியாக ஆண் ஆசிரியர்களுக்குப் பதிலாக பெண் ஆசிரியர்களையே நியமிக்கப்பட வேண்டும்.

ஹாண்டர் குழு ஆண் பெண் இரு பாலார்க்கும் தனித்தனியே பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தது. உயர்சாதிப் பெண்கள் பருவமடைந்த பின்னர் வீட்டுக்கு வெளியே செல்ல அனுமதிக்கப்படாமையால் அவர்களின் வசதிக்காக வீட்டுக் கல்வி என்று சொல்லப்படும் சனனா (Zenana) முறையையும் பரிந்துரைத்துள்ளது.

1881 ஆம் ஆண்டில் சென்னை மாகாண மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்தப் பெண்களான 1,57,49,588 பேரில் 39,104 பெண்கள் படித்துக் கொண்டிருந்ததாகவும் 94,571 பெண்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களென்றும் அறியமுடிகிறது.

இந்தியா முழுமையும் ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் 2,13,428 பெண்கள் மட்டுமே படித்துக் கொண்டிருந்தார்களென்றும் தெரிய வந்தன. இந்த எண்ணிக்கை மிகக் குறைவானதாக இருந்த போதிலும் 1878 ஆம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்த 78,678 பெண்களோடு ஒப்பிட்டு நோக்குகையில் வியத்தகு முன்னேற்றம் என்றே கூறலாம்.

டாக்டர் குக்கான் என்பவர் 1889-90 ஆம் ஆண்டின் கல்வி அறிக்கையில் பெண்களின் ஒட்டுமொத்தக் கல்வியின்மை நிலையைக் குறிப்பிட்டுள்ளார். ஒரு சமுதாயம் படித்த ஆண்களையும் படிக்காத பெண்களையும் கொண்டிருந்தால் முன்னேற்றம் அடைவதென்பது இயலாத காரியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அரசு தனியார் பள்ளிகள் நிறுவிட நிதியுதவியளித்திட முடிவெடுத்ததும் சுதேசியவாதிகளும் தேசபக்தர்களும் சமூகச் சீர்திருத்தவாதிகளும் பெண்களுக்கான கல்விக்கூடங்களை நிறுவ முன்வந்தனர்.

இதன்பின்னரே பெண்களுக்கான பள்ளிகள் கல்லூரிகள் தோன்றி பெண் கல்வி வளர்ச்சி அடைவதற்கான முன் முயற்சிகளில் ஈடுபட்டன. ஆனாலும் இந்தியாவின் கல்விமுறை பெண்களை அடிமைப்படுத்தும் ஆணாதிக்க சமூகப்போக்கை வலியுறுத்திப் போவதாகவே இருந்துள்ளது. இந்தியாவில் இதுவரை கல்விக்காக அமைக்கப்பட்ட குழுக்கள் பலவும் இதே கருத்தை வலியுறுத்தியுள்ளன.

# ஈரானில் 6 விமான நிலையங்களில் தாக்குதல் 15 போர் விமானங்களை அழிப்பு இஸ்ரேல் அறிவிப்பு



ஈரான் நாட்டில் 6 விமான நிலையங்களில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தி உள்ளது. ஈரான் நாட்டின் 15 போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் அழிக்கப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

ஈரான்- இஸ்ரேல் இடையே, 10 நாட்களாக சண்டை நடக்கிறது. இரு நாடுகளிலும் உள்ள இந்தியர்கள், அமெரிக்கர்கள் அவசரமாக சொந்த நாட்டுக்கு திரும்புகின்றனர். 'அணு ஆயுதம் தயாரிக்கும் திட்டத்தை ஈரான் முற்றிலுமாக கைவிடாத வரையில், போரை நிறுத்த மாட்டோம்' என்று இஸ்ரேல் கூறுகிறது. இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவும் களம் இறங்கியது.

போரில் குதித்தது அமெரிக்கா: அணு ஆயுத தளங்கள் மீது ராட்சத குண்டு வீச்சு: பதிலடியில் அமெரிக்கா கதறும் என்கிறது ஈரான்

"ஈரானில் உள்ள மூன்று முதன்மையான அணுசக்தி நிலையங்கள் மீது வெற்றிகரமாக தாக்குதல் நடத்தியுள்ளோம்," என, அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்தார். மூன்று நிலையங்களும் செயலிழந்ததாக அவர் தெரிவித்தார். இஸ்ரேலின் நீண்ட கால எதிரியான ஈரானுக்கு ஆதரவாக இருந்து வரும் ரஷ்யா, சீனா, துருக்கி போன்ற நாடுகள் அமெரிக்காவை பலமாக கண்டித்துள்ளன.

இந்நிலையில், ஈரான் நாட்டில் 6 விமான நிலையங்களில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தி உள்ளது. ஈரான் நாட்டின் 15 போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் அழிக்கப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. ஈரானில் ராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. இஸ்ரேல் அரசின் பாதுகாப்பை உறுதி செய்ய, தொடர்ந்து வான்வழி தாக்குதல் நடத்தப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## ஹோர்முஸ் நீரிணை மூடல் கச்சா எண்ணெய் இறக்குமதியில் இந்தியாவுக்கு பாதிப்பா?

ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடுவதால், கச்சா எண்ணெய் பொருட்களை அதிகளவு இறக்குமதி செய்யும் இந்தியாவுக்கு பாதிப்பு ஏற்படுமா? என்று கேள்வி எழுந்துள்ளது. இஸ்ரேலுக்கு ஆதரவாக தங்களின் அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்திய பிறகு, உலக கச்சா எண்ணெய் போக்குவரத்தின் முக்கிய வழித்தடமான, ஹோர்முஸ் நீரிணையை மூடுவதாக ஈரான் அறிவித்துள்ளது. இதனால், கச்சா எண்ணெய் விலை உயர்ந்து, பெட்ரோல், டீசல் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது உலக நாடுகளிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஈரானின் இந்த முடிவால் இந்தியாவுக்கு பாதிப்பு ஏற்படுமோ? என்பதே இந்தியர்களின் தற்போதைய மனநிலையாக உள்ளது. இந்நிலையில், ஹோர்முஸ் நீரிணையை மூடுவதால், இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் இறக்குமதியில் எந்த பாதிப்பும் ஏற்படாது என்பது தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக வல்லுநர்கள் கூறியதாவது: ஹோர்முஸ் நீரிணையானது, சவுதி அரேபியா, ஈரான், ஈராக், குவைத் மற்றும் ஐக்கிய அரபு நாடுகளுக்கு கச்சா எண்ணெய் ஏற்றுமதிக்கு முதன்மை பாதையாக இது விளங்குகிறது. கத்தார் போன்ற நாடுகளின் இயற்கை எரிவாயு (டுபே) கப்பல்களும் இந்த நீரிணை வழியாகச் செல்கின்றன.

உலகளவில் கச்சா எண்ணெய் இறக்குமதி மற்றும் பயன்பாட்டில் இந்தியா 3வது நாடாக திகழ்கிறது. தனது மொத்த கச்சா எண்ணெய் தேவையில் 90 சதவீதத்தை இந்தியா இறக்குமதி செய்கிறது. இதில் 40 சதவீதம் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. அவை ஹோர்முஸ் நீரிணை வழியாகவே கொண்டு வரப்படுகின்றன. தற்போது, இந்தியா 500 கோடி பீப்பாய் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து, அதனை சுத்திகரித்து பெட்ரோல் மற்றும் டீசலாக மாற்றுகிறது. மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றங்களால், முன்னெச்சரிக்கையாகவே, இந்த ஜூன் மாதத்தின் தொடக்கத்தில் இருந்தே ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியை கணிசமாக அதிகரித்துள்ளது சவுதி அரேபியா மற்றும் ஈராக்கில் செய்யப்படும் ஒட்டுமொத்த இறக்குமதியை விட ரஷ்யாவிலிருந்து அதிகமான எண்ணெயை இந்தியா இறக்குமதி செய்து வருகிறது.

அதாவது, ரஷ்யாவிடம் இருந்து தினமும் 20 லட்சம் பீப்பாய்கள் முதல் 22 லட்சம் பீப்பாய்கள் இறக்குமதி செய்யப்படுகிறது. இது இந்தியாவின் மொத்த கச்சா எண்ணெய் தேவையில் 35 சதவீதமாகும். ரஷ்யாவில் இருந்து மே மாதத்தில் 19 லட்சம் பீப்பாய்கள் இறக்குமதி செய்யப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டதால், ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் பொருட்கள், சூயஸ் கால்வாய், ஆப்பிரிக்காவை சுற்றிவரும் கடல் வழி அல்லது பசிபிக் பெருங்கடல் வழியாக வரும். இல்லையெனில், அமெரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளின் வழியாக கொண்டு வரப்படலாம். இதற்கு செலவுகள் அதிகமானாலும், இந்தியாவின் நம்பிக்கையான வழித்தடங்களாகும்.

அதேபோல, அமெரிக்காவிடம் இருந்து மே மாதத்தில் நாளொன்றுக்கு 2.80 லட்சம் பீப்பாய்கள் இறக்குமதி செய்யப்பட்டு வந்த நிலையில், ஜூன் மாதத்தில் நாளொன்றுக்கு 4.39 லட்சம் பீப்பாய்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், மத்திய கிழக்கு நாடுகளிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியை பெருமளவில் இந்தியா குறைத்துள்ளது.

இஸ்ரேல் - ஈரான் போர் பதற்றம் காரணமாக, கச்சா எண்ணெய் விநியோகத்தில் தற்போது எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றாலும், கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதால், விரைவில் அதன் தாக்கம் தென்படலாம், இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டே இஸ்ரேல் - ஈரான் இடையே போர் தீவிரமடைந்த நிலையிலும், நிலைமை கட்டுக்குள் இருப்பதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





## எதிரி மிகப்பெரிய தவறு செய்துவிட்டார்: ஈரான் தலைவர் கமேனி காட்டம்

"எதிரி மிகப்பெரிய தவறு செய்துவிட்டார்" என ஈரான் தலைவர் அயதுல்லா அலி கமேனி குற்றம் சாட்டி உள்ளார்.

ஈரான் - இஸ்ரேல் இடையே, 10 நாட்களாக சண்டை நடக்கிறது. இரு நாடுகளிலும் உள்ள இந்தியர்கள், அமெரிக்கர்கள் அவசரமாக சொந்த நாட்டுக்கு திரும்புகின்றனர். 'அணு ஆயுதம் தயாரிக்கும் திட்டத்தை ஈரான் முற்றிலுமாக கைவிடாத வரையில், போரை நிறுத்த மாட்டோம்' என்று இஸ்ரேல் கூறுகிறது.

ஈரானின் போர்டோ, இஸ்பஹான், நடான்ஸ் ஆகிய 3 அணு சக்தி நிலையங்களில் அமெரிக்கா தாக்குதல் நடத்தி உள்ளது. இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவும் களம் இறங்கியதால், மேற்கு ஆசிய பிராந்தியம் மட்டுமின்றி, உலகம் முழுவதும் கவலை ஏற்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றமான சூழல் நிலவுகிறது.

இந்நிலையில், சமூக வலைதளத்தில் ஈரான் தலைவர் அயதுல்லா அலி கமேனி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: தண்டனை தொடர்கிறது. எதிரி மிகப்பெரிய தவறு செய்துவிட்டார். எதிரி கண்டிப்பாக தண்டிக்கப்பட வேண்டியவர். அதற்கு நேரம் வந்துவிட்டது. இப்போது அவர் தண்டிக்கப்படுவார். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட கிருஷாந்தியின் உறவினர், மதத் தலைவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இணைந்து இன்று முற்பகல் 10.10 மணியளவில் அணையா விளக்கை ஏற்றிப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

அதன்பின்னர் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்காக மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது

தொடர்ச்சியாக 3 நாட்களுக்கு சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டமும் முன்னெடுக்கப்படுகின்றது.

இன்றைய ஆரம்ப நிகழ்வில் யாழ். மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் மற்றும் சர்வமதத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், அர்ச்சுனா இராமநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, செல்வராசா கஜேந்திரன், முன்னாள் யாழ். மாநகர சபையின் மேயர் வி.மணிவண்னணன், மக்கள் செயல் அமைப்பின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையர் வோல்கர் டர்க் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நாளன்று மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தீருகோணமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏ.எல்.எம்.அஸ்மி தலைமை தாங்கினார்.

மாநகர மேயரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு கட்சியும் அதற்குறிய 50 வீதம் கோரத்தைக் கொண்டிருக்காத நிலையில் மேயர் தெரிவு இடம்பெற்றது.

இலங்கைத் தமிழசுக் கட்சியின் சார்பில் கந்தசாமி செல்வராஜாவும், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பதுகே தனுஸ்க ஜெயலத் மேயர் தெரிவுக்குப் போட்டியிட்டனர்.

சபையில் இருந்த 25 உறுப்பினர்களும் பகிரங்க வாக்கெடுப்புக்குக் கோரியதனால் பகிரங்க வாக்கெடுப்பு இடம்பெற்றது.

வாக்கெடுப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் கந்தசாமி செல்வராஜா 19 வாக்குகளையும், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பதுகே தனுஸ்க ஜெயலத் 6 வாக்குகளையும் பெற்றனர்.

அதனடிப்படையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் கந்தசாமி செல்வராஜா திருகோணமலை மாநகர சபையின் முதலாவது மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதையடுத்துத் துணை மேயராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் முகமட் மௌசூம் சபையில் ஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## சாவகச்சேரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சாவக்கேச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

28 உறுப்பினர்களைக் கொண்ட சாவகச்சேரி பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 8 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 7 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 6 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 5 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி தலா ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன.

இந்நிலையில் சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக பொன்னையா குகதாசன் முன்மொழியப்பட்டார். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் செல்வரத்தினம் மயூரன் முன்மொழியப்பட்டார்.

28 உறுப்பினர்களைக் கொண்ட சாவகச்சேரி பிரதேச சபையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் வாக்களிப்பில் கலந்துகொள்ள நீதிமன்றம் தடை உத்தரவு விதித்திருந்தது. இதனால் 27 உறுப்பினர்களிடத்தில் மாத்திரம் வாக்கெடுப்பு இடம்பெற்றது.

தவிசாளர் பதவிக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட பொன்னையா குகதாசன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட செல்வரத்தினம் மயூரன் ஆகியோர் தலா 10 வாக்குகளையும் பெற்றனர். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஓர் உறுப்பினர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் 6 உறுப்பினர்களல என மொத்தமாக 7 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர். திருவுளச்சீட்டின் பிரகாரம் இடம்பெற்ற தவிசாளர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பொன்னையா குகதாசன் தெரிவானார். உப தவிசாளராக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட இராமநாதன் யோகேஸ்வரன் தெரிவானார்.

## பச்சிலைப்பள்ளியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை சபை மண்டபத்தில் இன்று நடைபெற்றது. இதன்போது தவிசாளர் தெரிவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் சுப்பிரமணியம் சுரேனின் பெயர் பரிந்துரைக்கப்பட்டபோது ஏனைய கட்சிகளில் இருந்து எவரின் பெயரும் பரிந்துரைக்கப்படவில்லை. இந்நிலையில், சுப்பிரமணியம் சுரேன் தவிசாளராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார் உப தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சிவகுரு செல்வராசா தெரிவு செய்யப்பட்டார். நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக 6 உறுப்பினர்களும், தேசிய மக்கள் சக்தி சார்பாக 3 உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பாக 3 உறுப்பினர்களும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக ஓர் உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மூதூர் பிரதேச சபையும் தமிழரசு வசம்




மூதூர், ஜூன் 23

மூதூர் பிரதேச சபையை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது.

மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு இன்று பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற தவிசாளர் தெரிவில், இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த செல்வரத்தினம் பிரகலாதன் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் .

கடந்த நான்கு தசாப்தங்களுக்குப் பின்னர் தமிழர் ஒருவர் மூதூர் பிரதேச சபையின் தவிசாளராக இம்முறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய தவிசாளர் தெரிவில் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 22 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இவர்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் 5 பேர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் 4 பேர், தேசிய மக்கள் சக்தி சார்பில் 3 பேர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் 3 பேர், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் 2 பேர், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் 2 பேர், தேசிய காங்கிரஸ் சார்பில் ஒருவர், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சார்பில் ஒருவர், சுயேச்சைக் குழு சார்பில் ஒருவர் என அங்கம் வகிக்கின்றனர்.

தவிசாளர் தெரிவில் இருவர் போட்டியிட்டனர். இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த செ.பிரகாலதனும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சியைச் சேர்ந்த எம்.றிபானும் போட்டியிட்டனர்.

பகிரங்க வாக்கெடுப்பின் மூலம் இலங்கைத் தமிழரசுக் கட்சி சபையைக் கைப்பற்றியது.

உப தவிசாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பி.டி.எம்.பைசர் தெரிவு செய்யப்பட்டார்.

# நிதி அமைச்சின் புதிய செயலாளர் நியமனம்!

நிதி அமைச்சின் புதிய செயலாளராக முன்னாள் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதி அமைச்சின் செயலாளராக இருந்த மஹிந்த சிறிவர்தன தனது பதவியை இராஜினாமா செய்ததோடு, ஆசிய அபிவிருத்தி வங்கியின் (யுனுடீ) மாற்று நிர்வாக இயக்குனராக பதவியேற்கவுள்ளார்.

இதனால் வெற்றிடமாகியுள்ள நிதி அமைச்சின் செயலாளர் பதவிக்கு புதிய செயலாளராக முன்னாள் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான ஹர்ஷன சூரியப்பெரும, தற்போதைய அரசாங்கத்தில் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சராகப் பணியாற்றியதோடு, மஹிந்த சிறிவர்தன ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து வெற்றிடமாகியுள்ள நிதி அமைச்சின் செயலாளர் பதவியை பொறுப்பேற்பதற்காக கடந்த வாரம் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாத்தளை மாநகர சபை தேசிய மக்கள் சக்தி வசம்!

மாத்தளை மாநகர சபையின் மேயராக தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் அசோக கொட்டச்சி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை மாநகர சபையின் மேயர் மற்றும் பிரதி மேயரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு மத்திய மாகாண உள்ளூராட்சி சபை ஆணையாளர் சமிலா அதபத்துவின் தலைமையில் இன்று (23) மாத்தளை மாநகர சபை ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மாத்தளை மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தி கட்சி 10 உறுப்பினர்களையம், ஐக்கிய மக்கள் சக்தி 6 உறுப்பினர்களையும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 2 உறுப்பினர்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 1 உறுப்பினரையும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 1 உறுப்பினரையும், சர்வஜன பலய 1 உறுப்பினரையும், ஐக்கிய தேசியக் கூட்டணி 1 உறுப்பினரையும் கைப்பற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இன்று மாத்தளை மாநகர சபையின் மேஜரைத் தேர்ந்தெடுக்கும் வாக்களிப்பின் போது வாக்களிப்பு தொடங்கிய சிறிது நேரத்திலேயே, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட 10 உறுப்பினர்கள் வாக்களிப்பைப் புறக்கணித்து, மண்டபத்திலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

அதன் பிறகு, உள்ளூராட்சி சபை ஆணையாளர் வாக்கெடுப்பை நடத்தினார்.

இதன்போது தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் அசோக கொட்டச்சி 12 வாக்குகளைப் பெற்று மாத்தளை மாநகர சபையின் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, அதன் பிரதி மேயராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் எம். மோகன் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

உள்ளூராட்சி சட்டத்தை மீறி பதவி வகிக்க தகுதியற்ற பெண் உறுப்பினருக்கு எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் சபையை விட்டு வெளியேறியதாகவும், இந்த வாக்கெடுப்பு சட்டவிரோதமானது எனவும் சபையிலிருந்து வெளிநடப்பு செய்த உறுப்பினர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.06.2025 வெளியிடப்பெற்றது.